மூதூர் சுனாமிக் காவியம்

மூதூர்- எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் சுனாமிக் காவியம்

மூதூர் எம்.எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விபரம்

- நூலின் பெயர் :- மூதூர் சுனாமிக் காவியம்.
- விடயம் :- காவியம்.
- நூலாசிரியர் :- மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்
- உரிமை :- நூலாசிரியருக்கு
- வெளியீடு :- உமர்நெய்னார் புலவர் கழகம், மூதூர்.
- முதற் பதிப்பு :- ஏப்ரல் 2019
- பிரதிகள் :- 500
- விலை :- 250/=
- ISBN :- 978 - 955 - 41569 – 7 – 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலாசிரியரின் வெளிவந்த ஏனைய நூல்கள்

1. அமைதிப் பூக்கள் (கவிதை)
2. மூதூர் உமர்நெய்னார் புலவரின் கவிதைகள் (தொகுப்பு)
3. மூதூர் உமர்நெய்னார் புலவரின் சீறாப்புராண உரை (மறுபதிப்பு)
4. மனிதம் (கவிதை)
5. ஊர் துறந்த காவியம்.
6. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள்.
7. அன்பின் மகனுக்கு. (கடிதங்களின் தொகுப்பு)
8. அதிமேதகு ஜனாதிபதிக்கு ஓர்மடல்.
9. நாயகக் காவியம்.
   (கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது)
10. இஸ்லாமியக் குறள். (காத்தான்குடி பள்ளி வாயல்கள் சங்கங்களின் சம்மேளன விருது பெற்றது)
11. மழலைக் கீதம்.
12. அஸ்ர.்.ப் அமரகாவியம்.
13. வாப்பு மரைக்கார் வழிக்காவியம்.
14. யதார்த்தம் (கவிதை)
15. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம் - ஆய்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள்- ஆய்வு.
17. எந்தன் ஊரே! (கவிதை)
18. வசந்தம் (கவிதை)
19. நண்பனை நவிலும் நா (கவிதை)
20. தங்கத்துரைக் காவியம்.
21. மஜீது மாகாவியம்.
22. அமீன் அருங்காவியம்.
23. மனையாள் மாட்சிமைக் காவியம்
24. மூதூர் முன்னேற்றக் காவியம்
25. படகு மூழ்கிய காவியம்
26. கவிஞர். மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் கவிதைகளில் தாய்மை உணர்வுகள்
27. மூதூர். எம்.எம்.ஏ. அனஸின் நன்னெறிக் குறள்
28. சிறுவர் கவிப்பேழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

ஆழிப் பேரலை அடித்துச் சென்ற
மூதூர் வட்டமெனும் பகுதியின்
ஸ்தாபகக் குடிமகனாக வாழ்ந்த
'போடி கந்தர' (போடியார் குலம்)
என்னும் விவசாயக் குலத்தின்
மூலவரான என் பாட்டனார்
சீனிமெய்யதீன் சதக்கு லெவ்வை
அவர்கட்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவுரை

ஆழமான கடலில் அல்லது அதன் அருகில் ஏற்படும் பூமி அதிர்ச்சி காரணமாக உருவாகும் கடல் அலைகளைத் தான் "சுனாமி" என்பர். இது ஓர் ஜப்பான் மொழிச்சொல். இச்சொல்லின் நேரடியான பொருள் " துறைமுகத்தின் கடல் அலைகளாகும்".

ஆழமான கடலில் சுனாமி அலைகளின் உயரம் குறைவாகவும், ஆழம் குறைந்த கடலில் சுனாமி அலைகளின் உயரம் மிகஉயரமாகவும், பேரலையாகவும் இருக்கும். அதனால்த்தான் கடலின் கரையில் இவ்வலைகளின் உயரம் மிக உயர்ந்ததாகக் காணப்படும்.

சுமத்ரா, இந்தோனேசியா கடற்கரைக்கு அப்பால் 9 ரிச்டர் பருமனைக் கொண்டதாகவும், கடலின் அடியில் இருந்து 6.2 கி.மீ ஆழத்தில் பெரும் பூமியதிர்ச்சியொன்று கடந்த 26.12.2004 காலை 6.30 மணியளவில் ஏற்பட்டது. அதனால் கடலில் பாரிய அலைகள் தோன்றி ஆசியாவுக்குக் குறுக்காகவும், அதற்கு மேலாகவும் 14 நாடுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்பூமியதிர்ச்சி இலங்கையில் 13 மாவட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தியது.

26.12.2004 காலை 08.45 மணியளவில் இச்சுனாமிப் பேரலைகளின் தாக்கம் மூதூர்ப் பிரதேசத்தில் ஏற்பட்டது. மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுகளில் மட்டும் 14 கிராம சேவகர் பிரிவுகளில் சுனாமியின் தாக்கம் ஏற்பட்டது. 17 கிராமங்கள் பாதிப்புக்குள்ளாகியது. 3614 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. மொத்தம் 17,559 குடும்ப அங்கத்தவர்கள் மொத்தமாக மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாதிப்புக்குள்ளாகினர். இதில் 293 பேர் உயிரிழந்தனர். 2500 பேர் காயமுற்றனர், 1377 வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. மூதூர் நகருள் வட்டம், தக்வாநகர், கபீர் நகர் போன்ற கடற்கரைப் பகுதிகளில் மட்டும் சுமார் 100 பேர்கள் மரணமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் சுனாமிக் காவியம் எனும் எனது இந்நூல் மூதூரில் அமைந்துள்ள வட்டம், தக்வா நகர், கபீர் நகர் ஆகிய மூன்று பகுதிகளில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தங்களை அதிகம் அடிப்படையாகக் கொண்டேயாக்கப்பட்டுள்ளது. ஆழிப் பேரலை அனர்த்தத்தால் அவர்கள் அடைந்த அவலங்கள், துன்பதுயரங்கள் அனைத்தையும் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

இன்னும் பல தசாப்தங்களுக்குப் பின்பு அப்போதைய இளைஞர்களிடம் இப்படியான ஒரு சுனாமி அனர்த்தம் மூதூரில் ஏற்பட்டது, கடல் கரையைத் தாண்டி ஊருக்குள் வந்தது உயிர், உடைமை இழப்புக்களை ஏற்படுத்தியது என்று சொன்னால் அவர்கள் நம்பமாட்டார்கள். அவர்கள் அப்போது இச்சுனாமி பற்றி அறிந்து கொள்வதற்காகவது இச் சுனாமிக் காவியம் நூல் பயன்படும் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு.

i. படகு மூழ்கிய காவியம்
ii. மூதூர் சுனாமிக் காவியம்
iii. ஊர் துறந்த காவியம்.

ஆகிய மூதூரின் மூன்று வரலாற்று நிகழ்வுகளையும் காவிய நூல்களாக யாத்ததையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியுறுகின்றேன். எழுத்து மூலமாக இவ் வரலாற்று நிகழ்வுகளை ஆவணமாகப் பதிவு செய்துவிட்டேன் என்று திருப்தியுறுகின்றேன்.

நன்றி.

எம்.எம்.ஏ. அனஸ்
02.04.2019

மட்டக்களப்பு வீதி,
பெரிய பாலம்
மூதூர் – 05
தொடர்புகளுக்கு – 0776288299

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் சுனாமிக் காவியம்

இறைஞ்சல்

சுனாமி என்னும் அனர்த்தத்தில்
சிக்கிச் சிதைந்த மூதூரின்
கனமாம் இழப்பு அனைத்தினையும்
காவிய மாக்க முயல்கின்றேன்.

காவியம் பாடும் காரியமோ
கடினம் என்றும் யானறிவேன்.
ஆவல் மிகைத்த காரணமாய்
அதனில் யானும் இறங்கிட்டேன்.

இறைவா இதற்காய் எந்தனது
இதயம் எல்லாம் தமிழ்தன்னால்
நிறைய நீயும் செய்திடுவாய்
நிதமும் எனக்கு அருளிடுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பு

கடலும் அன்று கரைதாண்டி
கனத்த அழிவைத் தந்திட்ட
இடமாம் மூதூர் நிகழ்வுகளை
இனிதே காவியம் எனயானும்
எடுத்துப் பாடும் போதினிலே
எந்தப் பிழையும் நேராமல்
வடிவாய் அதுவும் அமைவதற்கு
வல்லோன் இறையே! காப்பெனக்கு

நகர் வாழ்த்து

மாவலி நதியும் பாய
மண்வளம் மிகைத்து ஓங்க
ஆவலாய் நோக்கத் தூண்டும்
அழகுறு பசுமை தோன்றும்
தாவரச் சோலை எங்கும்
தனிப்பெரும் அழகை நல்கும்
பாவளம் கூடப் போதா
புகழ்ந்திட மூதூ(ரை) யன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா வளமும் இங்கு
ஏற்றமாய் நிறைந்து நிற்க
இல்லா நிலைமை என்ற
இடருமே இல்லை இங்கு
செல்வமே நிறைந்த ஊராய்ச்
சொல்வோம் மூதூர் தன்னை
இல்லையே இதுபோல் நாட்டில்
இன்னோர் ஊரும் என்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியம்

ஆழக் கடலில் அதனருகில்
ஆங்கே புவியின் அதிர்ச்சியதால்
ஆழியில் ஏற்படும் அலையினைத் தான்
ஆழிப் பேரலை என்றிடுவர்.

சுனாமி என்றே இவ்வலைக்குச்
சூட்டினர் பெயரை ஜப்பானியர்
கனத்த பொருளில் துறைமுகத்தின்
கடலலை என்றே பொருளாகும்.

ஆழக் கடலில் சுனாமியலை
அதிக உயரம் தாவாது
ஆழம் குறைந்த கரைதனிலே
அதிகம் உயரும் அறிவோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழம் கூடிய கடல்தனிலே
ஆழிப் பேரலை வேகங்கள்
கீழாம் நிலையில் இல்லாமல்
கிளர்ந்தே அடிக்கும் புரிவோமே!

சுமத்ரா இந்தோ னேசியாவின்
சமுத்திரத் தருகினில் ஏற்பட்ட
குமுறிய அந்த நிலஅதிர்வே
குறித்த சுனாமி ஆகியது.

ஒன்பது றிச்டர் பருமனிலே
உருவே ஆன நிலஅதிர்வே
அன்றுப தின்நாலு நாடுகளில்
ஆழிப் பேரலை ஆகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரா யிரத்தி நான்காண்டின்
இறுதி மாதம் இருபத்தின்
ஆறாந் தேதிகா லைமூதூ(ரை)
ஆழிப் பேரலை தாக்கியதே!

இற்றை நாளில் நாட்டினிலே
இடங்கள் பதின்மூன் றுமாவட்டங்(களை)
பற்றிய இந்தச் சுனாமியது
பாரிய அழிவினைக் கொடுத்ததுவே.

பத்துத் தொடக்கம் பதினைந்து
பகன்றிடு நிமிடம் மட்டும்தான்
இத்தகு சுனாமி பேரழிவை
இங்கு நடாத்திச் சென்றதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிப் பேரலை தாக்கிட்ட
அந்த இடத்தை மீண்டுமொரு
வாழிடம் என்றே மாற்றுதற்கு
வருடம் பலவும் ஆகிடுமே!

கடலின் கரையைக் காலமெல்லாம்
களிப்பாம் வாழிடம் எனக்கொண்ட
இடமாம் மூதூர் மீனவர்கள்
இன்னலை கண்டனர் சுனாமியினால்

கரையினைக் காலம் பூராவும்
கட்டித் தழுவும் கலைகற்ற
திரையும் அன்று ஏன்தானோ
தரையினுள் நுழைந்தது அதிசயமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமி என்ற சொல்லதனைக்
சொல்லவும் தெரியா மக்களுக்கு
கனாவே என்று எண்ணும்படி
கடலும் அன்று மாறியதே!

கடலின் அலையில் களிப்பதனைக்
கண்ட மூதூர் மீனவர்கள்
இடரின் இடமாய் அவ்வலைகள்
இருப்பதை உணர்ந்ததும் அன்றேதான்.

கடலின் கரையினில் வாழ்வதனைக்
கனவில் கூட எண்ணாத
திடமாம் முடிவை எடுப்பதற்கும்
துணிந்தனர் மூதூர் மீனவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டம் தக்வா நகருடனே
வணப்புறு கபீப் நகர் தனையும்தான்
தட்டிச் சுனாமி சென்றதுவே
தொகையாம் அழிவைக் கொடுத்ததுவே.

ஊருள் கடலும் ஊடுருவி
உயிர்கள் உடைமை வீதிகட்குப்
பாரிய அழிவைக் கொடுத்ததுவே!
பயங்கர நிகழ்வாய் ஆகினவே!

பயங்கர வாத வன்செயலே
பேரழி வென்று எண்ணிட்ட
நியதியை இந்தப் பேரலையும்
நிலமிசை மாற்றி அமைத்ததுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலின் கரையில் களிப்பதனைக்
காலம் பூராய்க் கண்டவர்கள்
இடரும் அங்கே இருப்பதனை
இற்றைத் தினத்தில் அறிந்திட்டார்

கடலின் தொழிலில் காலத்தைக்
கடத்தி வந்த மீனவர்கள்
விடமும் அதிலே உள்ளதனை
விளங்கிக் கொண்டதும் அன்றேதான்.

ஆழிப் பேரலை அனர்த்தத்தால்
அடைந்தனர் மூதூர் மீனவர்கள்
வாழிடம் இல்லா நிலையினையும்
வசந்தம் இல்லா வாழ்வினையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலின் குழந்தைகள் என்றேதான்
கதைப்பர் மீனவ மக்களினை
இடரினை அந்த மீனவர்க்கு
இழைத்தது கடலும் அன்றெதற்கோ?

கடலும் அன்று கரைதாண்டி
காண ஊரை நாடியதால்
இடரின் இடமாய் மூதூரும்
இங்கே ஆகிப் போனதுவே.

ஆழிப் பேரலை எனவந்த
அந்தச் சுனாமி காரணமாய்
ஊழிக் காலம் வந்ததென
உரைத்து மக்களும் கலங்கினரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநூற் றித்தொன் னூற்றிமூன்று
இன்னரும் உயிர்கள் தனையுமன்று
பறித்துமே சென்றது சுனாமியது
பிரதே சம்மூ தூர்தனில்த்தான்.

ஈரா யிரத்திஐ நூறுபேர்கள்
இந்ததாம் பேரலை தனிலன்று
பாரிய காயமும் அடைந்தனரே!
பிரதே சம்மூ தூரினிலே.

மூதூர் நகருள் மட்டுமது
மொத்தம் தொன்னூ றுபேர்உயிர்க்குப்
பாதக மாகிப் பறித்திட்ட
பரிதா பமதும் புரிந்திட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் அறியாப் பாலகரும்
ஓதி வந்த மாணவரும்
அன்றைய ஆழிப் பேரலையில்
ஆவி துறந்து போயினரே!

துடிப்பு மிக்க சிறுவர்களும்
தொட்டில் உறங்கிய பாலகரும்
அடித்த ஆழிப் பேரலையால்
அள்ளிச் செல்லப் பட்டனரே!

வாழ்வின் எல்லை அடைந்திட்ட
வயதில் கூடிய முதியோரும்
வீழ்ந்து நீரில் போயினரே!
வாழ்வை உலகில் முடித்தனரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயை இழந்து தனயர்களும்
தாரம் இழந்து கணவர்களும்
மாய்ந்து நாமும் போகாமல்
மண்ணில் தப்பிய தேன்என்றார்.

மரணம் உற்ற மையித்தை
மக்களும் தேடி எடுத்தனரே
குறையாம் உயிரில் கிடந்தோர்க்கும்
குறித்த வைத்தியம் செய்தனரே!

காயம் உற்ற நபர்களுக்கும்
கதியாய்ச் சிகிச்சை அளித்தனரே
ஆய பணிகள் அத்தனையும்
ஆற்றிட மக்கள் குவிந்தனரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயந்திரம் மூலம் குழிவெட்டி
இறந்த உடலம் அடக்கிட்ட
துயரின் சரிதையைச் சுனாமியது
தொடங்கி வைத்தது மூதூரில்.

வீடும் வீழ்ந்து நொறுங்கினவே!
வள்ளம் வலையும் சிதைந்தனவே!
ஆடும் மாடும் அழிந்தனவே!
அராஜக ஆட்டம் நிகழ்ந்தனவே!

தென்னை மரங்களும் வீழ்ந்தனவே!
தொகையாய்க் கோழியும் மாய்ந்தனவே!
என்ன ஏது நிகழ்வதுவோ!
என்று மக்களும் ஏங்கினரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக முடிவின் போதுவரும்
ஊழிக் காலம் இதுதானோ!
பலவாய் மக்கள் சிந்தித்துப்
பயத்தில் ஒடுங்கிப் போயினரே!

மரண ஓலம் மட்டும்தான்
மூதூர் மண்ணில் ஒலித்தனவே
இரணம் இல்லா நிலையதுவும்
இங்கே இருப்புக் கொண்டனவே!

வாழ்வின் வசந்தம் எல்லாமும்
வந்த பேரலை அனர்த்தத்தால்
வீழ்ந்து எங்கோ! மறைந்தனவே!
விரக்தி மட்டும் விஞ்சினவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலே என்று காலமெல்லாம்
திரைகடல் தன்னில் அலைந்தோர்கள்
அழிந்தே போகும் அளவுக்கு
அந்தக் கடலும் ஆனதுவே!

பொறுமை உருவாய் ஆனகடல்
பொங்கிச் சீறி வந்தன்று
சிறுமைத் தனமாய் எம்மூரைச்
சிதைத்துச் சீக்கிரம் சென்றதுவே!

வாழ்வின் வசந்தம் எல்லாமும்
வந்த ஆழிப் பேரலையால்
பாழ்நிலைக் காகிப் போனதுவே!
பயங்கர அழிவைத் தந்ததுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையில் காலம் பூராகக்
களிப்பை அலையால் தந்தகடல்
பெரிய இன்னல் அளித்தன்று
பேயாய் கொடுமை புரிந்ததுவே.

துன்பம் தரவே வந்திட்ட
துட்டத் தனத்துப் பேரலையால்
இன்னல் ஊரில் நிலைத்ததுவே
இன்பம் இல்லா தொழிந்ததுவே.

கனவில் கூடக் கடலதனைக்
காணக் கூடா தெனஎண்ணும்
மனநிலை கொண்ட நிலைமைக்கு
மக்களைச் சுனாமி மாற்றியதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையும் தனது ஆற்றலினை
இகத்தார் புரியும் அளவிற்கு
கரையைத் தாண்டிய அலைகளினால்
காட்டி அன்று விட்டானே!

கடலின் கரையும் சுடுகாடாய்க்
காட்சி நல்கி நின்றதுவே!
தொடர்ந்தும் சுனாமி வருமென்று
தொலைவினில் மக்களும் நகர்ந்தனரே!

ஆழிப் பேரலை அனர்த்தத்தில்
ஆவி தப்பிய மாந்தரெலாம்
வாழ வழிஇனி ஏதுவென
வேதனை மிகைத்து வாடினரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு எத்தனை ஆனாலும்
ஆழிப் பேரலை அனர்த்தத்தால்
மாண்ட உறவார் நினைவேதான்
மனதில் என்றும் நிறைந்திருக்கும்.

சுனாமி தந்த சோகத்தைச்
சொல்லத் தானும் முடிந்திடுமோ!
கனவாய் அதனை வாழ்வினிலே
களைந்து எறிய இயன்றிடுமோ!

சுனாமி தந்த சோகமது
சுமக்க முடியாச் சுமையதனால்
நினைத்து நினைத்து மக்களுமே
நிதமும் கண்ணீர் வடித்தனரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லிடம் இழந்து அகதியென
இவர்கள் அகதி முகாமுள்ளும்
நல்லார், உறவார் மனைகளிலும்
நாடித் தஞ்சம் அடைந்தார்கள்.

பக்கத் திருந்த கலைக்கூடம்
பாசத் துறவார் வீடெல்லாம்
மக்கள் தங்கும் இடமாக
மாறி அன்று திகழ்ந்ததுவே!

ஒவ்வோர் வேளை உணவுகளும்
உதவி என்றே பெற்றுத்தான்
அவ்வப் போது உண்டார்கள்
அவல நிலைக்கு ஆனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவூர் இருந்து வந்திட்ட
பெரும்பெரும் செல்வ மாந்தரெல்லாம்
பெரிதும் உதவி நல்கினரே!
புனிதப் பணியாய்க் கருதினரே!

அரசும் அகதி மக்களுக்கு
ஆன உதவி அத்தனையும்
சிறப்பாய்ச் செய்து நின்றதுவே
சேவை தன்னில் மூழ்கினவே!

சங்கம் நிறுவனம் எல்லாமும்
சனங்களின் தேவை போக்குதற்காய்
இங்கு வந்து இயன்றவரை
இன்னரும் பணிகள் ஆற்றினவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ண உணவும் கொடுத்தார்கள்
உடுத்த உடையும் ஈந்தார்கள்
கண்ணீர் சிந்திய மக்களினைச்
களிப்பே காணச் செய்தாகள்

ஆழிப் பேரலை முடிந்தபினே
அனர்த்தம் நிகழ்ந்த இடமெல்லாம்
பாழ்நிலைக் கிங்கே ஆகியதே!
பார்க்கப் பயங்கரம் தோன்றியதே!

மனித சஞ்சா ரமில்லாத
மயானம் போல அப்பகுதி
அனைத்தும் காட்சி தந்ததுவே!
அழிவின் தடயம் தெரிந்ததுவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரித்த ஆடு கோழியுடன்
மாடு மீன்கள், உயிரிகளால்
பொறுக்க முடியாத் துர்வாடை
பெரிதாய் ஆங்கு வீசியதே!

கடலின் நீரால் சேறுகளால்
கிணறும் வளவும் அழுக்குற்ற
இடமாய்க் காட்சி நல்கியதே!
இடிந்து கட்டடம் கிடந்ததுவே.

வள்ளமும் வலையும் சிதைந்தேதான்
வளவுகள் தோறும் கிடந்ததுவே
பள்ளமும் திடலும் என்றேதான்
பாதைகள் யாவும் ஆயினவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரை எங்கும் அசுத்தங்கள்
காட்சிப் பொருளாய்க் கிடந்ததுவே
தொடவும் முடியா விலங்குடல்கள்
தொகையாய் அங்கு கிடந்ததுவே.

இத்தகு அசுத்தம் அனைத்தையுமே
இனிதே சுத்தம் செய்வதற்காய்
எத்தனை சங்கம் நிறுவனங்கள்
எல்லாம் பணியில் இறங்கினவே!

அகதி என்றே ஆகிட்ட
அனைவர் தமக்கும் தற்காலிக
அகமாய்க் கொட்டில் கொடுத்தேதான்
அவர்க்கு அரசும் உதவியதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதி மக்கள் இவர்களுக்கு
அனைத்து உணவுப் பொருட்களுமே
உகந்த உலர்உண வுஎன்றேதான்
உரிய அளவில் கிடைத்தனவே!

அகதிகள் மீளக் குடியேற
ஆன புதிய வீடுகளை
உகந்த இடத்தில் கொடுத்தரசும்
உதவிய தன்று நன்கேதான்.

சுனாமித் தாக்கம் இல்லாத
தொலைவாம் தூரத் திடங்களிலே
இனாமாய் வீடுகள் அமைத்தேதான்
இவர்களுக் அரசும் வழங்கியதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்எம் சில்வா மில்இடத்தில்
அதிகம் வீடுகள் அமைத்தேதான்
தேர்ந்து அகதி மக்களுக்கு
தயவாய் அரசும் கொடுத்ததுவே.

அகதிகள் வீட்டுத் திட்டத்தை
ஆர்எம் சில்வா மில்லிடத்தில்
நிகழச் செய்தவர் நியாஸ் என்னும்
நன்றாம் பிரதே(ச) செயலாளரன்(றோ!)

காணிகள் இருந்த அகதிகட்கு
காட்டிய இடத்தில் வீடுகளைத்
தானே அமைத்துக் கொடுத்தேதான்
தீர்த்தனர் அவர்கள் பிரச்சினையை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டம் பால நகரினிலே
வாங்கிக் காணியில் வீடுகளை
கட்டியும் அரசு கொடுத்ததுவே!
காத்திரப் பணியும் புரிந்ததுவே!

இறைவா மூதூர் பதியினிலே
இனிமேல் இந்தச் சுனாமியது
அறவே வாரா நிலைதன்னை
அருளால் நீயும் ஆக்கிவிடு

இயற்கை அனர்த்தம் ஏதுதானும்
இந்த ஊரில் நேராமல்
உயரிய உந்தன் அருளாலே
உன்னத உதவியை நல்கிவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் மண்ணில் மகிழ்ச்சியது
மேவிட நீயும் அருளிவிடு
போதும் என்ற அளவுக்குப்
புத்தெழில் ஓங்கச் செய்துவிடு.

ஆழிப் பேரலை அனர்த்தத்தில்
அல்லல் உற்ற மக்களுக்கு
வாழப் பல்வகை உதவிகளும்
வழங்கிய அனைவரும் வாழியவே!

சுனாமிக் காவிய மிந்நூலை
சிரத்தையு டன்படிப் போர்வாழி
அனர்த்தம் அணுகா ஊராக
அவனியில் மூதூர் வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த இடரும் இல்லாத
ஏற்றம் மிக்க ஊராக
இந்த நாட்டில் மூதூரும்
இனிதே வாழிய! வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமி வந்த நாள்

*   காலமெல்லாம்
கடலின் கரையைத் தழுவிய
கடல் அலை..... அன்று
ஊருக்குள் ஊடுருவி வந்த நாள்.

*   கடலின் கரையினில்
சுகந்தத்தின் சொந்தங்களாய்
வாழ்ந்த மீனவ மக்கள்
அவலத்தால்.........
ஆராதிக்கப்பட்ட நாள்.

*   மீனவ மக்களின் வாழ்வுக்கு
ஆதாரம் என்றிருந்த கடல்
அவர்களின் அழிவுக்கு
அடிப்படையாய் ஆகிப்போன நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* யுத்தங்களால்
அகதி முகாம்களையும்
உயிர், உடைமை இழப்புகளையும்
அனுபவித்த மூதூர் மக்கள்
கடலின் அலைகளிலும்
இவ் அபாயம் அடங்கிக் கிடந்ததை
அறிந்து கொண்ட நாள்.

* மனித சஞ்சாரங்களின் மகுடமாய்
மிளிர்ந்த கடற்கரைப் பகுதி
பாழடைந்த பகுதியாய்ப்
பரிமாணம் பெற்ற நாள்.

* கடலின் அலைகள்
ஊருக்குள் உலாவந்ததால்
மூதூர் மீனவர் வாழ்வின்
நம்பிக்கைச் சுடர்கள்
அணைந்து போன நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மானுடம்....
சுமக்க முடியாச் சோகத்தைச்
சுமந்து கொண்ட.....நாள்.

* மனைகள் தோறும்
மரண ஓலங்கள்
உரக்க ஒலித்த நாள்.

* கடலின் அலைகளில்
தாவித் திரிந்த மக்களை
அவ் அலைகளே...
காவிச் சென்ற.... நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஒருசில நிமிடங்களில்
ஓர் நூற்றாண்டுச் சோகத்தின்
சொந்தக் காரர்களாய்
மக்கள் மாறிப்போன.....நாள்.

* மூதூரின் மகிழ்வு
ஓர் காலைப் பொழுதில்
அஸ்தமமான நாள்.

* கடல் அலைகளில்
தாவித்திரிந்த மக்களின் வாழ்வும்
அவ்வலைபோல்
அலைக்கழிந்து போன நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மூதூர் மீனவர்களின்
பகலும் இரவும்
பசியுடன் போராடத் தொடங்கிய நாள்.

* கடலைக் காணும் போதெல்லாம்
அவர்கள்.....
அச்சமடையத் தொடங்கிய நாள்.

* கடலால் துரத்தப்பட்டு
அகதி முகாம்களில்
அடைக்கலமாகி
வறுமையால் வரவேற்கப்பட்ட நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மூதூர் மீனவர்களின்
நம்பிக்கைச் சுடர்கள்
அணைந்து போன..... நாள்.

* இறைவனின் அற்புத ஆற்றலை
எம்மக்கள்
தம் கண்களால்
கண்டு கொண்ட..... நாள்.

* இயற்கையின் சீற்றம்
மூதூர் மண்ணை
முகர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கண்ணீர்ப் பெருக்கால்
ஊரின்......
சந்தோச சாம்ராஜ்ஜியம்
சரிந்து போன... நாள்.

* பசுமையால்....
செழுமையுற்றிருந்த ஊர்
பாழடைந்து போன நாள்.

* அதிசயம் நடந்ததாய்
மூதூர் இதிகாசம்
தன் ஏட்டில்
எழுதிக் கொண்ட நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சோகத்தின் சுமையால்
இலட்சக் கண்களின் கண்ணீர்
பிரளயமாய்ப் பெருக்கெடுத்த.... நாள்.

* மூதூர் பிரதேசத்தில்
ஒரே நாளில்...
முன்னூறுக்கும் மேற்பட்ட
மனித உயிர்கள்
மண்ணறையைத் தழுவிய நாள்.

* தம் கடலின் கரையில்
கொடுமைகள் காத்துக்கிடந்ததை
கடலின் மைந்தர்கள்
கண்டு கொண்ட.... நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கடற்கரை என்பது
தென்றல் தவழும்
இடம் மட்டுமல்ல
அது....
அபாயத்தின் அடித்தளமும் என்பதை
எம்மவர்கள் உணர்ந்து கொண்ட....நாள்.

* இதுவரை
வறுமையின் சோகத்தில்
வாழ்ந்தவர்களை....
சோகத்தின் சிகரத்தில் வாழ
வழிவகுத்த நாள்.

* கனவிலும் கடலையே
நேசித்த மக்களின் நம்பிக்கையை
அக்கடலே நாசமாக்கிய .....நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பகல் இரவுகளாய்
பசுமை நினைவுகளில்
கடற்கரை மணற்பரப்பில்
வசந்த உலாவந்த எம்மக்கள்
அகதி முகாம்களுக்குள்
அடங்கிப் போன நாள்.

* பரம்பரை பரம்பரையாய்
வாழ்ந்து வந்த
எம்மூர் கடலோர இருப்புக்கள் யாவும்
இல்லாமல் ஆக்கப்பட்ட நாள்.

* ஒருசில நிமிடங்களில்
ஓர் நூற்றாண்டுச் சோகத்தின்
சொந்தக்காரர்களாய்
எம்மூரவர்கள்
ஆழிப்பேரலையால்
ஆக்கப்பட்ட நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஆழிப் பேரலையின் அவலம்கண்டு
எம்முரில்....
கண்ணீரும்..... அழுத நாள்.

* அகதி முகாம்களின் அவதாரமாய்
யுத்தங்களையும், வன்செயல்களையும்
விளங்கியிருந்த எம்மக்கள்
கடலும் காரணமெனக்
கண்டு கொண்ட நாள்.

* கடல்..... அமுதவேசத்தில் இருந்த
விசம் என்பதையும்
ஊர்மக்கள்
உணர்ந்து கொண்ட நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மூதூரில் ஒவ்வொரு தந்தையும்
தன் மக்களுக்கு....
கடலின் கரையை அண்மித்துக்
குடியிருக்க வேண்டாமென்று
உயில் எழுதத் தொடங்கிய...... நாள்.

* இதுவரை காலமும்
மீனவர்களை வாழவைத்த கடலே...
அவர்கள் சாவுக்கும்
காரணம் என்பதைக்
கண்டு கொண்ட நாள்.

* நல்வாழ்வின் நாட்டத்தில்
கடலையண்டி வாழ்ந்தவர்கள்
கண்ணீரின் தோழர்களாய்க்
காட்சி தந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஊரில்...
கடற்கரைப் பகுதிகள்
குடியிருப்புக்களின் புதைகுழிகளாய்
மாறிப் போன நாள்.

* கொட்டியாரக் கடலின்
அலைக்கரங்களிடம்
தங்கள் வாழ்க்கைக் கனவுகளைப்
பறிகொடுத்த மீனவர்கள்
பரிதாபத்தின் விலாசங்களாய்
மாறிப்போன.... நாள்.

* சுனாமிச் சோகத்தில்
மூழ்கிப் போனதால்
மூதூர் மீனவர்கள்
மகிழ்ச்சியை மறந்துபோன நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உழைப்பில் உயர்ந்தவர்களாய்
இருந்தவர்கள்.....
ஆழிப் பேரலையால்
வறுமையின் வாரிசுகளாக ஆன நாள்.

* மீனவர்களின்
வள வாழ்வுக் கனவுகள் யாவும்
கலைந்து போன... நாள்.

* பல்லறை வீடுகளில் வாழ்ந்தவர்கள்
படங்குக் கொட்டில்களின்
குடிகளாய் ஆன நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*	உழைப்பின் அடையாளமாய் இருந்தவர்கள்
அகதிகள் என
ஆகிப்போன நாள்.

*	எம்மீனவர் வாழ்வுத் தோப்பில்
அல்லல் வறட்சி
ஆரம்பிக்கப்பட்ட நாள்.

*	கடலையண்டி வாழ்வதற்குப் பதிலாக
பாலை வனங்களிலோ...
மலையுச்சிகளிலோ...
வாழ்ந்திருக்கலாமென
எண்ணியேங்குமளவுக்கு
மீனவ உள்ளங்களின்
கடல் மீதான நம்பிக்கைகள்
ஒடிந்து போன நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எம் மீனவர்களுக்கு
வாழ்வளித்த கடலே!
அவர்களைக் கொண்றொழிக்கும்
கொடும்வாளாய் ஆன நாள்.

* 1957ம் ஆண்டில்
மூதூர் பிரளயக் கழுகின்
கோரப் பிடியில் இருந்து
மனிதப் பட்சிகளைக் காத்த
கடற்கரைப் பகுதியெல்லாம்
அழிந்து போன நாள்.

* செழுமையுற்றிருந்த
மீன்பிடித் தொழில்
ஊரில்
அருகிப்போக
ஆரம்பித்த....நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கடலின் தென்றல் சுகந்தத்தை
மாலைப் பொழுதுகளில்
நுகர்ந்து வந்த எம்மக்களுக்கு
இன்று...
கடலைப் பார்ப்பது கூட
வேண்டாத ஒன்றாக
ஆகிப் போன நாள்.

* கடலின் செல்லப்பிள்ளைகளான
மீனவர்கள்
அகதிமுகாம்களின்
தத்துப் பிள்ளைகளான ......நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஊரில் விருந்துக்கும்
விருந்தோம்பலுக்கும் புகழ் பெற்ற
கடற்கரைப் பிரதேசம்
ஒரு சில நிமிடத்துள்
அகதிமுகாம் உணவுக்கு
ஆளாகிப் போன நாள்.

* ஆம். எங்கள் சரித்திரம்
தண்ணீரால் மாய்ந்த இம்மக்களுக்காய்
என்றும்...
கண்ணீரைச் சிந்திக் கொண்டே இருக்கும்.

****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலலைகள் அன்று கரைதாண்டி வந்து
இடரதனை மூதூர்க் இழைத்த - விடயத்தை
சொல்லிட்டேன் யானும் சுனாமிக் கவியாக
எல்லோரும் என்றுமிதை எண்ண.

ஆழியலை மூதூரில் அன்று சுனாமியென
ஊழி நிகழ்வேபோல் ஊர்மக்கள் - வாழிடத்துள்
வந்து நிகழ்த்திட்ட வேதனையின் பேரழிவைத்
தந்தேன் நான் காவியமாய்த் தான்.

மூதூர்- எம்.எம்.ஏ.அனஸ்

ISBN978-955-41569-7-5
9 789554 156975

Printed by: ART - 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org